**நிர்மாண உத்தரவாத நிதியம் - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் (''நிதியம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1999 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 11(ஈ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறவேண்டிய தேறிய வருமானம் ரூபா 10.34 மில்லியன் ஆக இருந்த போதிலும் இந்த மீதி ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 1.96 மில்லியன் கடன் மீதியொன்றை உள்ளடக்குகின்றதை வயது பகுப்பாய்வு மேலும் வெளிப்படுத்தியுள்ளது. எனினும், இந்த கடன் மீதிகள் கடன்பட்டோர் மீதிகளிற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 48 ஆம் பந்தியை மீறும் வகையில் நிதி நிலைமை கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளது. | சுட்டிக்காட்டியதற்கு நன்றி மேலும் எதிர்காலத்தில் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயார் செய்வோம். | நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிலையான வைப்பு மீதி ரூபா 1,635.23 மில்லியனாக இருந்த போதிலும் பட்டியலின் பிரகாரம் மீதி ரூபா 1,635.28 மில்லியனாக இருந்தது. எனவே ரூபா 0.05 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இதை எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு நன்றி. குறிப்பிடப்பட்ட வேறுபாடு தொடர்ந்துவரும் கணக்கீட்டு ஆண்டில் சீர்செய்யப்படும். | கணக்கீட்டு பிழைகள் சீர்செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர் 2018 யூன் 05 முதல் 2021 செப்தெம்பர் 28 வரை நிதியத்தின் 05 வங்கிக் கணக்குகளுக்கு ரூபா 1.42 மில்லியனை வைப்புச் செய்திருந்தனர். அந்த மீதிகள் இனங்காணப்படாததுடன் நிதி நிலைமை கூற்றில் இனங்காணப்படாத நடைமுறைப் பொறுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கடந்த மூன்று ஆண்டுகளில், முன்னர் இனங்காணப்படாத வைப்புக்களை இனங்காண்பதற்கு நாங்கள் விரிவான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம், இதன் விளைவாக, இந்த வைப்புக்களில் பெரும்பாலானவை தற்போது இனங்காணப்பட்டுள்ளன. | வங்கி நேரடி வைப்பு இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திம்பெர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள விலைப்பட்டியல் கழிவு மீதி ரூபா 10.30 மில்லியனாக இருந்தது. இதற்கு தொழில்தருநர்களால் விலைப்பட்டியல்களின் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததே காரணமாகும். அதில் ஒரு நிர்மாண கம்பனியிடமிருந்தான ரூபா 10.21 மில்லியன் அல்லது 98 சதவீதம் மற்றும் ஏனைய கம்பனியிடமிருந்தான மீதமுள்ள 02 சதவீதம் அல்லது ரூபா 92,019 ஆகியன 04 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்ட நிதியை அறவிடுவதற்கு பிணக்குத்தீர்த்தல் செயன்முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. மற்ற நிறுவனம் வெற்றிகரமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்திருப்பதால், அந்த ஒப்பந்ததாரரிடமிருந்து எந்த நிதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனவே, கூட்டுறவு சமூகப் பொறுப்பு என வகைப்படுத்தப்படும் செலவினம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரர்களிடம் இருந்து நிலுவையாக உள்ள விலைப்பட்டியல் கழிவு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு எந்தப் பிணையும் இல்லாமல் நிதியம் பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களை வழங்குகிறதுடன் ஒப்பந்ததாரர்களின் மோசமான | பல்வேறு காரணங்களுக்காக பல முறை தொழில்தருநர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப தேவை மதிப்பீட்டிற்குப் பின்னர் 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 150 | ஒப்பந்ததாரர்களின் செயலாற்றல் சரியாக கண்காணிக்கப்பட வேண்டும், மேலும் நிதியத்திற்கு |

| | | |
|---|---|---|
| செயலாற்றல் சந்தர்ப்பங்களில் தொழில்தருநர்கள் நிதியத்திலிருந்து உத்தரவாதப் பணத்தைக் கோருகின்றனர். 2011 முதல் 2019 வரை 22 சந்தர்ப்பங்களில் ரூபா 87.65 மில்லியன் தொகை தொழில்தருநர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது, இந்த மீதியில் ரூபா 4.67 மில்லியனை அறவிட முடியாதிருந்ததுடன் 2019 இல் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பு செய்யப்பட்டது. மேலும், 2020 முதல் 2022 வரை தொழில்தருநர்களுக்கு செலுத்தப்பட்டதும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதுமான தொகை ரூபா 30.16 மில்லியனாக இருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டில் ரூபா 26.67 மில்லியன் நிதியத்திற்கு கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியத்தினால் தொழில்தருநர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 139.80 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 அளவில் நிதியத்திற்கு திரும்ப அறவிடப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக பிணக்குத்தீர்த்தல் உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளின் தீர்ப்புக்கள் நிதியத்திற்கு சாதகமாக இருந்த போதிலும் தொடர்புடைய பணத்தை அறவிட முடியவில்லை. மீளாய்வாண்டில் இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக நிதியம் ரூபா 0.85 மில்லியனை செலவிட்டிருந்தது. | மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்களுக்கு கொடுப்பனவை மீள்நிரப்பு செய்வதற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அதைச் செய்யத் தவறிய சந்தர்ப்பங்களில் அவர்கள் வழங்கியிருந்த உத்தரவாதங்களின் அடிப்படையில் நட்டத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செலுத்தப்பட வேண்டிய தொகைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 100,000 கிலோமீற்றர் கிராமிய வீதி திட்டத்தின் கீழ் நிர்மாண ஒப்பந்தங்களை மேற்கொண்ட 314 ஒப்பந்ததாரர்களின் சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களை செலுத்துவதற்காக வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு 2020 முதல் 2023 வரை நிதியத்திற்கு ரூபா 33,389 மில்லியனை வழங்கியிருந்தது. அதில் ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா | இந்த செயற்திட்டத்தின் கீழ், உத்தரவாதங்களை வழங்கும் போது ஏற்படும் ஆபத்துக்களைக் குறைப்பதற்காக அனைத்து கொடுப்பனவுகளும் நிதியம் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. ஆபத்து குறைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு ஒப்பந்ததாரரின் தனிப்பட்ட செயற்திட்டத்தை | இது தொடர்பாக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சுடன் உடன்படிக்கைகள் அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) ஏற்படுத்தப்பட்டு, நிறுத்தி |

32,782.47 மில்லியன் விடுவிக்கப்பட்டது. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 220.62 மில்லியன் தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படாமல் போக்குவரத்திலுள்ள பணக் கணக்கில் நிதியத்தினால் நிறுத்திவைக்கப்பட்டது. இந்த மீதியில் ரூபா 88.10 மில்லியன் 01 முதல் 03 ஆண்டுகள் வரையிலும், ரூபா 3.43 மில்லியன் 03 முதல் 05 ஆண்டுகள் வரையிலும் காணப்பட்டது. 123 பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 60.55 மில்லியன் தொகை ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படாமல் நிதியத்தில் தக்கவைக்கப்பட்டது. மேலும், ஏனைய ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிப்பதற்கு பல்வேறு தரப்பினரும் நிதியத்திற்கு வழங்கிய ரூபா 27.77 மில்லியன் தொகையான பணத்தில் உரிய ஒப்பந்ததாரர்களுக்கு 2023 திசெம்பர் 31 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியில் ரூபா 7.08 மில்லியன் மற்றும் ரூபா 11.89 மில்லியன் கூட்டுமொத்தம் முறையே 01 முதல் 03 ஆண்டுகள் வரையிலும், 03 முதல் 07 ஆண்டுகள் வரையிலும் உரிய செயற்திட்டங்களின் தற்போதைய செயலாற்றல் போதுமானதாக இல்லாததால் நிதியத்தால் தக்கவைக்கப்பட்டது. எனவே, இந்தத் தொகைகளின் எதிர்கால தீர்ப்பனவிற்கான பொறுப்பை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. இதனால், ஒப்பந்ததாரர்களின் விலைப்பட்டியலை தீர்ப்பனவு செய்வதற்காக தொழில்தருநர்கள் கொடுக்கும் பணத்தை போக்குவரத்திலுள்ள பணமாக (Transit Money) நீண்டகாலத்திற்கு வைத்திருப்பது பிரச்சனையொன்றாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

மதிப்பாய்வு செய்த பின்னர் நிதிகள் விடுவிக்கப்படுகின்றன. தற்போதைய நிலவரப்படி, ஒதுக்கப்பட்ட நிதிகளில் 97% இற்கும் அதிகமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய ஆபத்து காரணமாக, பொறுப்புக்கள் தீர்க்கப்படும் வரை பல செயற்திட்டங்களின் நிதிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்ததாரர்கள் பூர்த்திசெய்தல் அறிக்கையை ஸஹதிகயக் (completion Report) வழங்கியிருக்கவில்லை அல்லது எமது நிறுவனத்தால் வழங்கப்பட்ட அசல் உத்தரவாதத்தை (original Guarantee) மீளளித்திருக்கவில்லை என்பதால், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் கணக்குகளை முழுமையாகத் தீர்ப்பனவு செய்ய இயலாது. எனவே, நிறுத்தி வைக்கப்பட்ட நிதிகளை விடுவிப்பதற்கு மேலதிக கால அவகாசம் தேவைப்படும்.

வைக்கப்பட்டுள்ள நிதிகள் காலரீதியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தொழில்தருநர்களிடமிருந்து பெறப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிதியத்தால் தக்கவைக்கப்பட்ட ரூபா 5.79 மில்லியன் கடன்கொடுத்தோர் மீதிகள் கடன்கொடுத்தோரை தொடர்பு கொள்ளாமல் அல்லது நிலுவையாக உள்ள மீதிகளைத் தீர்க்காமல் மீளாய்வாண்டிற்கான நானாவித வருமானமாகப் பதிவு செய்யப்பட்டது. | | நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பல்வேறு வருமான கணக்குகளில் ஏறத்தாழ ரூபா 5.8 மில்லியன் தொகை சேர்க்கப்பட்டது. இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களில், இந்த நிதிகளை உரிய வைப்பாளர்களுக்கு மீள்நிரப்பு செய்வதற்கு முடிவு செய்யப்படும். | உரிய கடன்கொடுத்தோருக்கு அறிவிக்கப்பட்டு, நிதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| (i) 40(1) ஆம் பந்தி | நிதியத்தின் அனைத்து நடவடிக்கைகளும் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதியத்தில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தகுதியான கணக்காய்வாளரை நிதியம் அதன் தொடக்கத்திலிருந்து நியமித்திருக்கவில்லை. | நிதியத்தின் அனைத்து செயற்பாடுகளும் உயர் முகாமைத்துவம் மற்றும் துறைகளுக்கிடையேயான முகாமையாளர்கள் மற்றும் குறிப்பாக உள்ளக கணக்காய்வு குழுவால் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. | நிதியத்தால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஒரு சுயாதீன உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (ii) 41(1) ஆம் பந்தி | நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை இந்த நிதியம் நடாத்தி நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக்கு சரியான | நிதியத்தின் உள்ளக கணக்காய்வு, காலரீதியான கணக்காய்வு மற்றும் பரீட்சிப்பு ஆகியவை தோற்றுவிப்பாளரின் சார்பாக செயற்படும் திறைசேரி பணிப்பாளர் | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நேரத்தில் அறிக்கையிட வேண்டிய போதிலும் நிதியம் ஒருபோதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்தியிருக்கவில்லை. மேலும், நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் நிதியம் பங்கேற்றிருக்கவில்லை. | நாயகத்தின் (பொது நிதி) முன்முயற்சியின் கீழ் ஒழுங்காக பரீட்சிக்கப்பட்டு ஏற்படும் பல பிழைகளை உடனடியாக சீர்செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டு கவனம் செலுத்தப்படுகிறது. தற்போது இந்த சூழ்நிலைக்கு அத்தகைய நடவடிக்கைகள் தேவைப்படாததால் முறையான பதிவு முறைமையை நிறுவுவதற்கான தேவைப்பாடு எதுவும் காணப்படவில்லை. | |
| (ஆ) | 1999 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 9 (உ) பிரிவு | நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக்கு சம்பளம், படிகள் அல்லது கௌரவ சம்பளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துக் காணப்படாத போதிலும் அவர்களின் கடமைகளைச் செய்வதில் ஏற்படும் செலவினங்களுக்காக மீள்நிரப்பு செய்யப்படலாம். எனினும், அதற்கு முரணாக நிதியமானது மாதாந்தம் ஒவ்வொரு நம்பிக்கைப்பொறுப்பாளரிற்கும் ஒரு நிலையான தொகையாக ரூபா 50,000 செலுத்தியிருந்ததுடன் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2.50 மில்லியன், ரூபா 2.30 மில்லியன் மற்றும் ரூபா 2.50 மில்லியன் கூட்டுமொத்தம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை அதனது கடமைகளை | நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் நிர்மாண உத்தரவாத நிதியத்தின் தோற்றுவிப்பாளரால் நியமிக்கப்பட்ட தொழில் வல்லுநர்களாவர். அவர்கள் பல்வேறு விசேட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாக உள்ளதுடன் நிர்மாணத் துறையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிக்கின்றனர். நிர்மாணத் துறையின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்கு அவர்கள் தீவிரமாக பங்களிக்கின்றனர், அதே நேரத்தில் நிதியத்தின் நோக்கங்களை | நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகளுடன் நிதியம் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்காக மேற்கொண்ட செலவினங்களின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், இந்த தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | வெற்றிகரமாக அடைந்துகொள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நோக்கத்திற்காக, நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்த பின்னர், முன்னர் மதிப்பிடப்பட்ட தொகை மாதாந்தம் மீள்நிரப்பு செய்யப்படுகிறது. இந்த தொகை கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் செலவினமாக கருதப்பட வேண்டும். | |
| (இ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணங்கள் 876(3) | சட்டபூர்வமற்ற நிதியத்தைத் தொடர்வதற்கு ஏதேனும் நியாயமான காரணங்கள் இருந்தால், அந்த நிதியமானது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும். எனினும், 2024 மார்ச் 31 வரையிலும் இந்த தேவைப்பாட்டுடன் நிதியம் இணங்கியிருக்கவில்லை. | நிதி அமைச்சின் செயலாளரால் இந்த நிதியம் நிறுவப்பட்டிருந்தது. நிதியத்தின் தோற்றுவிப்பாளராக திறைசேரியின் செயலாளர் தேவைப்பட்டவாறு மேலும் சட்டம் அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பார் என்று நிதியம் எதிர்பார்த்தது. | நிதியமானது நிதிப் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

**1.8 வரிச் சட்டங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியம் ஆண்டின் போது மிகையூதியமாக ரூபா 2.54 மில்லியன் மொத்த தொகை கொடுப்பனவை (Lump-Sum payment) செலுத்தியிருந்த போதிலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் 2023 மார்ச் 29 இல் வெளியிடப்பட்ட எஸ்ஈசீ/2023/ஈ/01 சுற்றறிக்கையின் 07(ஆ) பிரிவின் பிரகாரம் இந்தத் தொகையிலிருந்து முற்பண தனிநபர் வருமான வரி (APIT) கழிக்கப்படவில்லை. | இதனை சுட்டிக்காட்டியதற்கு நன்றி. மேலும் 2024 ஆம் ஆண்டிலிருந்து அதனை சீர்செய்வதற்கு நாங்கள் குறித்துக் கொண்டோம். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 332.69 மில்லியன் மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 285.27 மில்லியனாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 47.42 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமானம் ரூபா 88.90 மில்லியனால் வீழ்ச்சியடைந்த போதிலும் செயற்பாடல்லாத வருமானம் ரூபா 169.94 மில்லியனால் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | விபரம் | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது (ரூபா. மில்லியன்) | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது (ரூபா. மில்லியன்) | முரண் {(சாதகமானது/ (பாதகமானது)} (ரூபா. மில்லியன்) | சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|
| | <u>வருமானம்</u> | | | | |
| (அ) | பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்தான வருமானம் | 13.45 | 102.36 | (88.91) | (87) |
| (ஆ) | நிலையான வைப்பு மீதான வட்டி | 365.36 | 194.10 | 170.26 | 88 |
| (இ) | நானாவித வருமானம் | 5.57 | 0.074 | 5.49 | 7,427 |
| | <u>செலவினம்</u> | | | | |
| (ஈ) | போக்குவரத்து செலவினம் | 6.51 | 5.19 | (1.32) | (25) |
| (உ) | செயற்பாட்டு கிரயம் | 1.21 | 2.54 | 1.33 | 52 |
| (ஊ) | உபகரண பராமரிப்பு | 0.56 | 0.36 | (0.20) | (56) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் 74 ஆக இருந்த பிணைமுறிகளின் எண்ணிக்கை, நடைமுறை ஆண்டில் 40 ஆகக் குறைந்துள்ளது. இதன் விளைவாக, பிணைமுறி வருமானம் ரூபா 89 மில்லியன் அல்லது 87% இலிருந்து குறைவடைந்துள்ளது.

(ஆ) தொழில்தருநரிடமிருந்து பெறப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிதியத்தினால் நானாவித வருமானத்திற்கு தக்கவைக்கப்பட்ட ரூபா 5.79 மில்லியன் கடன்கொடுத்தோர் மீதிகள் காரணமாக நானாவித வருமானத்தில் முன்னேற்றம் இருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடிய தகவல்களின் பிரகாரம், நடைமுறை மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான நிதியத்தின் பல குறிப்பிடத்தக்க கணக்கீட்டு விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விகிதம் | 2023 | 2022 |
|---|---|---|
| **திரவ விகிதம்** | | |
| நடைமுறை விகிதம் | 5.73 : 1 | 4.29 : 1 |

| **இலாபத்தன்மை விகிதம்** | **சதவீதம்** | **சதவீதம்** |
|---|---|---|
| சொத்து மீதான திரும்பல் | 11.59 | 10.97 |
| தேறியலாப வீதம் | 73.43 | 76.68 |
| உரிமை மீதான திரும்பல் | 15.97 | 16.33 |

மீளாய்வாண்டில், நிதியத்தின் நடைமுறை விகிதம் மற்றும் சொத்துக்கள் மீதான திரும்பல் விகிதம் அதிகரித்தது, அதே நேரம் தேறியலாப வீதம் மற்றும் உரிமை மீதான திரும்பல் குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியமானது ரூபா 2.98 மில்லியன் பெறுமதியான முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) வடிவமைத்து அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றை செய்துகொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அபிவிருத்திக்கு பின்னர் செலுத்தப்பட வேண்டிய முதலாவது தவணைப்பணம் மற்றும் இரண்டாவது தவணைப்பணம், ரூபா 2.08 மில்லியன் கூட்டுமொத்தம் அல்லது ஒப்பந்த பெறுமதியில் 70 சதவீதம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டது மேலும் இது நிதி நிலைமை கூற்றில் மென்பொருள் அபிவிருத்தி முற்பணங்களாக நடைமுறை அல்லாத சொத்துகளின் கீழ் காட்டப்பட்டது. பணம் செலுத்தப்பட்டு சுமார் 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2024 மார்ச் 31 வரையிலும் இந்த முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) தயாரிக்கும் பணி பூர்த்தி செய்யப்படவில்லை. மீளாய்வாண்டின் போது நிதியம் உடன்படிக்கையின் பிரகாரம் பணியை பூர்த்திசெய்யத் தவறியிருந்தது. | ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசாங்க கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதை ஊக்கப்படுத்தவில்லை. இதன் விளைவாக, பல்வேறு நிறுவனங்கள் ரூபா 6.0 மில்லியன் முதல் ரூபா 60.0 மில்லியன் வரையிலான வீச்சில் விலை முன்மொழிவுகளை சமர்ப்பித்த பின்னர் நோக்கெல்லை திருத்தப்பட்டது. தற்போது ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்துடனான உடன்படிக்கையில் இது தொடரப்படுகிறது. முதற்கட்டமாக, இந்த செயற்திட்டம் இணங்கியவாறு ரூபா 3.0 மில்லியன் பெறுமதியில் செயற்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இரு தரப்பினரும் இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ தகவல் முறைமை வெற்றிகரமாக உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியம் 1999 இல் நிறுவப்பட்டதுடன் 2000 முதல் 2005 வரையான காலப்பகுதியில் நான்கு நிகழ்வுகளில் பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 55.00 மில்லியன் மூலதன மானியம் பெறப்பட்டது. ஆனால் வருடாந்த இலாபத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கான பொறிமுறை எதுவும் | அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 12(அ) நிபந்தனையின் கீழ், சொத்தின் அனைத்து அல்லது பகுதி நிறுவனத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும், அதே நேரம் தோற்றுவிப்பாளர் அதைத் | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை அல்லது மிகையின் பகுதியை வருடாந்தம் திறைசேரிக்கு அனுப்புவதற்கான முறைமை |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படவில்லை. அதே நேரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ரூபா 949.79 மில்லியன் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிலிருந்து, ரூபா 500 மில்லியன் ''உட்கட்டமைப்புக்கான நிதியேற்பாடு'' என்ற பெயரிடப்பட்ட ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டு விளைவற்ற நிலையில் இருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் மற்றும் ஒதுக்கங்கள் ரூபா 912.95 மில்லியனாக இருந்த அதே நேரம் நீண்டகால முதலீடுகள் ரூபா 1,208.91 மில்லியனாக இருந்ததுடன் குறுகிய கால முதலீடுகள் ரூபா 1,041.61 மில்லியனாக இருந்தது. | தவிர வேறு எந்த வழிகாட்டலையும் வழங்கியிருக்கவில்லை, அனைத்து ஒதுக்கங்களும் சேவை வரம்புகளை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. | ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதியத்தின் பிணைமுறி மற்றும் உத்தரவாத வரி வருமானத்தை (Bond and Guarantee Levy Income) கணிப்பிடும் போது 100,000 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக முறையே முற்பண பிணைமுறிகள் (Advance Bond) மற்றும் செயலாற்றல் பிணைமுறிகளுக்கான (Performance Bond) பிணைமுறி பெறுமதியில் இருந்து 2% மற்றும் 2.5% அறவிடப்பட்டது. மேலும், முற்பண பிணைமுறிகள் மற்றும் செயலாற்றல் பிணைமுறிகளுக்கான பிணைமுறி நீடிப்பு வரிக் கட்டணங்கள் முறையே 1.5% மற்றும் 1.75% ஆகும். இந்தக் கட்டணங்களை விபரிக்கும் விசேட முகாமைத்துவ அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கூடிய கூட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிணைமுறி வருமானத்தில் இருக்கும் ஆபத்து நிலைகளின் அடிப்படையில் பிணைமுறி மற்றும் உத்தரவாத வரி வருமானத்திற்கு ஒரு தொகை சேர்க்கப்பட்டது. இந்த பெறுமதி, நடைமுறையில் உள்ள இடர்களுக்கு ஏற்ப முகாமைத்துவத்தால் மதிப்பிடப்பட்டதுடன் பிணைமுறி மற்றும் உத்தரவாத வரி வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கோவைகளில் இடர் மதிப்பீட்டின் ஆவணங்கள் அல்லது கலந்துரையாடல் குறிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. மேலும், | ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அபாயங்களைக் குறைப்பதற்கும், தேவைப்பட்டால் பிணையின் தேவையை நிவர்த்தி செய்வதற்கும், கட்டண முரண்பாட்டிற்காகவும் தேவைப்பட்டால் பிணையை ஏற்பாடு செய்வதற்காகவும் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை அனைத்துப் பொறுப்புக்களையும் முகாமைத்துவத்திடம் ஒப்படைத்துள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் அபாயங்களை முழுமையாக மதிப்பிட இயலாமையின் காரணமாக, நிறுவனத்தின் சார்பாக முகாமைத்துவத்திடம் குறிப்பிடத்தக்க பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இடர் குறைப்பு செயன்முறை சிக்கலானதாக உள்ளதால் தொடர்புடைய முடிவுகள் ஒரு குழுவால் எடுக்கப்படுகின்றன. | நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் முகாமைத்துவம் அல்லது குழுக்களால் எடுக்கப்படும் முடிவுகள் பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமானக் கோவைகளில் சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2020 முதல் 2023 வரையிலான நிதியத்தின் வருடாந்த அறிக்கைகளில் சேவைக் கட்டணங்கள் தொடர்பான பிரிவுகளில் குறிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. | | |
| (ஈ) | நிதியத்தில் கணனிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமை செயற்பாட்டில் காணப்படவில்லை, மேலும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் மைக்ரோசொப்ற் எக்செல் தொகுப்பு (Microsoft Excel package) மூலம் செயன்முறைப்படுத்தப்படுகிறது. நாளாந்தம் அதிக அளவிலான கொடுக்கல்வாங்கல்கள் பதிவாகி வருவதால், கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு கணிசமான அளவு நேரத்தை எடுத்துக்கொள்வதையும் கணக்கீட்டு பிழைகள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாதுள்ளது. | நிறுவனமானது முன்பே நிறுவப்பட்ட கணக்கீட்டு முறைமையை (QB) கொண்டுள்ளது, இதன் மூலம் தொடர்புடைய கணக்கீட்டு பேரேடுகள் முன்பே வடிவமைக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றன. எனினும், எமது தேவைகளுக்கு, இந்தத் தகவல் எக்செல் தாள்களில் உள்ளீடு செய்யப்பட வேண்டும், பின்னர் குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு அதற்கேற்ப சீர்செய்யப்பட வேண்டும். | பொருத்தமான கணனி மயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், கேள்வி செயன்முறை மூலம் வாகனங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் புதிய கேள்வி செயன்முறையை மேற்கொள்ளாமல் சிஏசி–6366 என்ற பதிவு இலக்கத்தை கொண்ட வாகனம், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக, ரூபா 265,000 (வற் மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி உட்பட) மாதாந்த விலைவிகிதத்தில் மீளாய்வாண்டில் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. இதனால், போட்டி கேள்வி மூலம் மிகக் குறைந்த விலையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இழக்கப்பட்டது. | சாரதி மற்றும் எரிபொருள் இல்லாத வாகனத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வது குறித்து செய்தித்தாள்களில் நிறுவனம் முறையாக விளம்பரம் செய்தது, மேலும் பெறப்பட்ட கேள்விகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டது. குழுவின் பரிந்துரைகள் பின்னர் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்குநர்கள் போட்டித்தன்மையுடன் தெரிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 4.2 ஆம் பிரிவின் பிரகாரம், பெறுகை நிறுவனம் பிரதான பெறுகைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். பிரதான பெறுகைத் திட்டம் குறைந்தபட்சம் மூன்று வருட காலத்திற்கு திட்டமிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை பட்டியலிட வேண்டிய போதிலும் நிதியம் அத்தகைய பெறுகை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | இந்த முன்மொழிவு பாராட்டப்படுகிறது, மேலும் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் செயற்பாடுகள் நடத்தப்படுகிறதால் பெறுகை செயன்முறையும் அதற்கேற்ப தயாரிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் பெறுகை நடவடிக்கைகளின் காலஎல்லையை கோடிட்டுக் காட்டும் பெறுகைக் கால அட்டவணையின் பிரகாரம் நிதியம் அதைத் தயாரித்திருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான பெறுகை நிகழ்ச்சித்திட்டம் காலஎல்லைக்கேற்ப தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் மேற்கொள்ளப்படுகிறது. | பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(உ) இன் பிரகாரம் நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் மூன்று மொழிகளிலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் கீழ் தயாரித்து ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலிருந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பான எந்தவொரு சான்றும் 2024 மார்ச் 31 வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அறிக்கையைத் தயாரிக்கும் போது, அரசாங்க வழிகாட்டல்கள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டதுடன் ஆவணங்கள் வடிவமைப்பின் பிரகாரம் சரியாகத் தயாரிக்கப்படவில்லை. எனினும், பிரிவு 1 முதல் 7 வரை தேவையான அனைத்து தகவல்களும் முறையாக அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தோற்றுவிப்பாளருக்கு தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (1) இ) இன் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் எதிர்வரும் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதீடு நடைமுறை ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், 2023 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் பாதீடு மேற்படி சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தோற்றுவிப்பாளர் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக்கு அதன் அனைத்து அதிகாரங்களையும் முழுமையாக வழங்கியுள்ளார். அதன் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவின் கீழ், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் நிதியத்தை நிர்வகிப்பதற்கும் முகாமைசெய்வதற்குமான ஏற்பாடுகளை கொண்டுள்ளனர். நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்றை எந்த தாமதமும் இல்லாமல் தோற்றுவிப்பாளர், திறைசேரி செயலாளரிடம் சமர்ப்பிக்கிறது. | நிதியம் நிதிப் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |